| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>சங்கபிள்ளை | அ.வ.எண். 371/2022 | 19.06.2025 |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்தின் சர்வே எண் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த வருவாய் கிராமத்தில் எல்லைக்குள் உள்ளது என்றால் மும்முடிசோழமங்களம் ஆகும். பிராதை நீங்கள் படித்து பார்த்தீர்களா என்றால் இல்லை. பிராதில் தெற்கில் வீடு, வடக்கில் கொல்லை என்று சொல்லியுள்ளாரா என்றால் ஆம். நீங்கள் எந்த சொத்தை வாங்கியுள்ளீர்கள் என்றால் ராஜா சொத்தை வாங்கியுள்ளேன். அதற்கு பத்திரம் எழுதியுள்ளீர்களா என்றால் இல்லை.
2. தாவா சொத்து உங்களுடைய சொத்து இல்லை என்றாலும் வாதி போட்ட வழக்கில் நீங்கள் வேண்டுமென்றே பிரச்சனை செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 15.07.2025 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.